# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 03 -04-2025

SC. 77/2022

அ.சா 3 – நரசிம்மா ,

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ம் நாள் நரசிம்மா என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நரசிம்மா | தந்தை பெயர் | வெங்கடசாமி |
| வயது | 45 | கிராமம் | காமன்தொட்டி |
| வட்டம் | சூளகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

முதல் விசாரணை : –

நான் காமன்தொட்டியில் குடியிருந்து வருகிறேன். தற்போது நான் அசோக் லைலேண்ட் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். இதற்கு முன்பு காமன்தொட்டியில் உள்ள கூட்டுறவு வங்கியில் வாட்ச் மேன் ஆக வேலை பார்த்தேன். கடந்த 14.08.2015 ம் தேதி இரவு 10.00 மணியளவில் , கூட்டுறவு வங்கியில் நான் இருந்தபோது அருகில் உள்ள டாஸ்மாக் கடையில் அதிகமாக சத்தம் கேட்டது. என்ன நடக்கிறது என்று வெளியே வந்து பார்த்தேன். அப்போது ரோட்டில் ஒரு வண்டி வந்தது அதில் 3 நபர்கள் இருந்தார்கள். அந்த வண்டியில் நடுவில் அமர்ந்து இருந்த நபர் ஒரு பையை தூக்கி பிடித்திருந்தார். பின்பு டாஸ்மாக் கடை அருகே சென்று பார்த்தேன். மணி சார் கீழே உட்கார்ந்து இருந்தார். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அங்கு வெங்கட்ராமன் என்பவரும் இருந்தார். என்ன நடந்தது என்று மணியிடம் கேட்ட போது நபர்கள் வந்து தன்னை அடித்து விட்டு பையை பிடுங்கி சென்றதாக சொன்னார். அவரை ஆம்புலன்ஸில் நாங்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ சமயம் நானும் மது அருந்தியிருந்தேன் அதனால், இரு சக்கர வாகனத்தில் சென்ற 3 நபர்களை எனக்கு சரியாக அடையாளம் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

Narasimma

Scanned with OKEN Scanner

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் இருந்த பகுதி இருட்டான பகுதி என்றால் சரிதான். அந்த ரோட்டில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் சென்று போய் கொண்டிருக்கும் என்றால் சரிதான். முதலில் பைக்கில் சென்ற நபர்களை பார்த்துவிட்டு தான் மணியை நான் பார்த்தேனா என்றால் ஆமாம். அந்த பை யாருடைய பை என்றும் , அதில் என்ன இருந்தது என்றும் , எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். இருட்டாக இருந்ததால் பையின் கலர் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். மணி தன்னுடைய பை என்றும் அதில் என்ன இருந்தது என்ற விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சத்தம் கேட்டு நான் செல்வதற்கு முன்பாக எவ்வளவு நேரத்திற்கு முன்பு சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். ஆம்புலன்ஸ் வந்த உடன் போலிசாரும் வந்து விட்டார்களா என்றால் ஆமாம். போலிசாரும் அன்றைய தினம் அங்கிருந்தபோது என்னை விசாரித்தார்கள் என்றும், அதன் பின்பு என்னை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

NoRouSchan

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

6/4/25

Scanned with OKEN Scanner

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 03 -04-2025

SC. 3/2022

அ.சா 4 – மனோகர் ,

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ம் நாள் மனோகர் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழுங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோகர் | தந்தை பெயர் | பொன்னுவேல் |
| வயது | 52 | கிராமம் | தொட்டம்பட்டி |
| வட்டம் | அரூர் | மாவட்டம் | தர்மபுரி |

முதல் விசாரணை : -

நான் தொட்டம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். தற்போது நான் சின்னார் டாஸ்மாக் கடையில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வருகிறேன். இதற்கு முன்பு சப்படி டாஸ்மார்க் கடையில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வந்தேன். கடந்த 14.08.2015 ம் தேதி இரவு 10.00 மணியளவில் , சப்படி டாஸ்மார்க் கடையில் சூப்பர்வைசராக வேலை பார்த்தபோது முடித்து விட்டு காமன் தொட்டியில் உள்ள நான் தங்கும் அறைக்கு சென்று கொண்டிருந்தபோது நான் வோலை பார்க்கும் டாஸ்மார்க் கடையில் சூப்பர்வைசராக வேலை பார்க்கும் மணி என்பவர் எனக்கு போன் செய்து ஷட்டருக்கு பூட்டு போட்டு சீல் வைத்து கொண்டிருந்தபோது 3 நபர்கள் இரு சக்கர வாகனத்தில் வந்து மது பாட்டில்கள் கேட்டதாகவும், கடை மூடப்பட்டு விட்டதால் மது விற்பனை செய்ய முடியாது என்று தெரிவித்ததாகவும் , அப்போது அந்த 3 நபர்களும் கையில் வைத்திருந்த கத்தியால் மணி வைத்திருந்த பையை அறுத்து பிடுங்கியதாகவும் அதை தடுத்த மணியை கையில் வைத்திருந்த ராடால் தலையில் அடித்து காயப்படுத்தியதாகவும் , பணப்பையை பிடுங்கி கொண்டு சென்று விட்டதாகவும் , எனக்கு தகவல் சொன்னார். உடனே நான் கடைக்கு புறப்பட்டு வந்த பார்த்தபோது 108 ஆம்புலன்ஸ் வந்திருந்தது மணி தலையிலும், கை , கால்களிலும் , அடிபட்டு இரத்தக்காயத்துடன் இருந்தார். காயம் பட்ட மணியை ஆம்புலன்ஸ் மூலமாக ஒசூர் அரசு

P. [signature]

Scanned with OKEN Scanner

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். மறு நாள் காலையில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார். சம்பவ இடத்தையும் சம்பவம் நடந்ததையும் ஆய்வாளரிடம் நான் சொன்னேன். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு , வரைபடம் வரைந்தார்கள். அதற்கு நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் சுந்தரன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 12** ஆகும், காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் சப்டி டாஸ்மார்க் கடையில் எத்தனை வருடங்களாக வேலை பார்த்தேன் என்றால் 7 வருடங்களாக வேலை பார்த்தேன். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசாரிடமும் சொன்னேன். மணி சொல்லித்தான் , சம்பவம் பற்றி எனக்கு தெரியும். மணி பணப்பையில் எவ்வளவு ரூபாய் வைத்திருந்தார் என்றும் , எவ்வளவு ரூபாய் வசூல் ஆனது என்றும் , என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு சம்பவ இடத்தில் 4, 5 நபர்கள் இருந்தார்கள். போலிசார் இல்லை. அந்த 4, 5 நபர்கள் பொதுமக்கள் ஆவார்கள். ஆம்புலன்ஸ் வந்த பிறகு போலிசாருக்கு தகவல் கொடுத்து , அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் , என்னுடைய விவரங்களும் , சம்பவம் பற்றி எனக்கு தெரிந்த விவரங்களும் , மணியை பற்றி எனக்கு தெரிந்த விவரங்களும் எழுதப்பட்டிருந்தது. காவல் நிலையத்திற்கு என்னை வரவழைத்து போலிசார் விசாரிக்கவில்லையா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

03/4/25

Scanned with OKEN Scanner